# மூலிகை வளர்ப்போம் பயன் பெறுவோம்



## நொச்சி

**தாவரவியல் பெயர்-***Vitex nigundo*
குடும்பம் - VERBENACEAE
சிங்களப் பெயர் - நிக
சமஸ்கிருத பெயர் - நிர்குண்டி
தமிழ் பெயர்- நொச்சி
ஆங்கிலப் பெயர் - Five-leaved chaste tree

நடுகை பாகம்- விதைகள், மொட்டு, தண்டுத் துண்டுகள் மூலம் எளிதாக வளர்க்கலாம்
மருந்தாகப் பயன்படும் பாகங்கள் - வேர், தளிர், இலை, பட்டை

அறிமுகம்

ஆயுர்வேத மருத்துவ முறையில் மற்றும்பல நாடுகளின் உள்ளூர் மருத்துவத்திலும் பரவலாகப் பயன்படுத்தப்படும். தெற்கு,தென்கிழக்கு ஆசிய மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில் பரவலாகக் காணப்படுகிறது.

தாவரவியல் விளக்கம்

நிமிர்ந்த புதராக அல்லது சிறிய மரமாக 2-8 மீட்டர் உயரம் வரை வளரும்.மரத்தின் பட்டை சிவப்பு கலந்த பழுப்பு நிறத்தில் காணப்படும்.மூன்று முதல் ஐந்து இலைகள் இணைந்த இலை தொகுப்பை கொண்டுள்ளது. ஒவ்வொரு இலையும் 4-10 சென்டிமீட்டர் நீளம் கொண்டதுடன் மத்திய இலை பெரிதாகவும் காணப்படும்.இலை விளிம்புகள் மென்மையான பற்கள் போன்ற அமைப்பில் இருக்கும்.பூக்கள் 6-7 சென்டிமீட்டரில் வெள்ளை மற்றும் நீலம் அல்லது அதற்கிடைப்பட்ட நிறத்தில் இருக்கும்.

காய்கள் வட்ட வடிவில் கருப்பு அல்லது ஊதா நிறத்தில் இருக்கும்.

தண்ணீருக்கு அருகாமையான இடங்களில்,புல்வெளிகளில் மற்றும் கலப்பு காடுகளில் இயற்கையாக வளரும்.

வெள்ளை, கருப்பு மற்றும் நீர்வாழ் என மூன்று முக்கிய வகைகள் உள்ளன. அதைத் தவிர கதுரு(கத்தரி) நொச்சி மற்றும் வல்(காட்டு )நொச்சி என இரண்டு வகைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

கை மருந்தாக

ஆம வாதம்(மூட்டு வியாதி)-இது மூட்டு வீக்கங்களில் மற்ற தாவரங்களின் இலைகளுடன்

சேர்த்து ஒத்தடம் இட பயன்படுத்தப்படுகிறது.

பூச்சுக்கடி-நோய்கள் கருப்பு நொச்சி இலைச் சாறு பூசுதல்.

ஆஸ்துமா-இலைகளை வேகவைத்த நீராவியை பிடித்தல்.

விவசாய விளக்கம்

மண் பாதுகாப்பு, பூச்சி கட்டுப்பாடு, பூஞ்சைக் கொல்லிகளுக்குப் பயன்படுகிறது

பூச்சிகளால் ஏற்படும் சேதத்தை குறைக்கவும், தானியங்களை நீண்ட காலத்திற்கு பாதுகாக்க இலைச் சாறு பயன்படுத்தலாம்.

சுமார் 15 செ.மீ முதிர்ந்த துண்டுகளை நடுவதன் மூலம் நாற்றுகளைப் பெறலாம்

லேசானதும் நன்றாக நீர் வடிந்து ஓடக் கூடிய களிமண் மண்ணில் நன்றாக வளரும்.

அறுவடை மற்றும் சேமிப்பு

நடவு செய்த 2,3 ஆண்டுகளுக்குப் பிறகு அறுவடையைப் பெறலாம். தாவரத்தின் வேர்கள், பட்டை மற்றும் இலைகள் அறுவடையாகப் பெறப்படுகின்றன.

காற்று புகாத மற்றும் பூச்சி தாக்காத வகையில் களஞ்சியப் படுத்த வேண்டும்.

தொகுப்பு

வைத்தியர் சமில வீரசிங்க

ஆயுர்வேத சமூக சுகாதார வைத்திய அதிகாரி

பாத்ததும்பர

தமிழாக்கம்
வைத்தியர் நுஸ்ரத் பானு
ஆயுர்வேத சமூக சுகாதார வைத்திய அதிகாரி
அம்பகமுவா